**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No.** **CC** No. 189/2023
**Prosecution witness.** PW 1

Name : சுரேஷ்

Father's Name: பாபு

Village : Religion:

Taluk : Age :

( A1,A2 present.)
Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 16.11.2023

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது எண்.15, கம்மார்பாளையம், சோழவரம் என்ற முகவரியில் குடியிருந்து தனியார் வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2023 அன்று இரவு 10.30 மணிக்கு நான் பணி முடித்து செங்குன்றம் அண்ணா சிலை அருகே பேருந்துக்காக காத்திருந்தபோது, நான் என் கையில் வைத்திருந்த ரெட்மி செல்போனை ஆஜா் எதிரிகள் பிடுங்கி சென்றுவிட்டனா். நான் அவா்களை துரத்திச் சென்றும் பிடிக்க முடியவில்லை. பின்னா் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் காலை காவல் நிலையத்தில் புகாா் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாா் நான் கொடுத்தது தான். புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகாா் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னா் நான் புகாா் கொடுத்த அன்று மதியம் 03.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து அழைத்ததின் பேரில் அங்கு சென்று பாா்த்தபோது எனது போனையும் ஆஜா் எதிரிகளையும் அடையாளம் காட்டினாா்கள்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நீல நிற ரெட்மி போன் என்னுடையது தான். மேற்படி நீல நிற ரெட்மி போன் அசா.பொ.வரிசை எண்.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசாா் என்னை விசாரித்தாா்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் 28.01.2023 ம் தேதி காலை 09.00 மணிக்கு புகாா் கொடுத்தேன். புகாரை நான்தான் எழுதினேன். புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். புகாரில் சொல்லியுள்ளபடி சம்பவம் நடந்தது இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் சுமாா் 300 மீட்டா் தூரம் என்றால் சரிதான். நடந்து சென்றால் கூட அதிகபட்சமாக 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். இருந்தபோதிலும் நான் ஒரு நாள் காலதாமதமாக புகாா் கொடுத்ததற்கான காரணத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் நான் எனது மொபைல்

மாடலை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். ஆனால் IMEI எண் குறித்த விவரங்கள் சொல்லவில்லை. புகாரில் எனது மொபைல் பெயரை போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மொபைல் என்னுடையதுதான்˙ ஏ்ன்பதற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எச்டிஎப்சி வங்கி நெல்சன்மாணிக்கம் சாலை கிளையில் பணிபுரிகிறேன்.

2. புகாரில் அடையாளம் தெரியாத 2 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.சம்பவம் நடந்த சமயம் மொபைலை பறித்து சென்றவர்களை எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் மொபைலை பிடுங்கி சென்றவர்களை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டிய பிறகு தான் எனக்கு தெரியும். தற்போது வரை நான் நீதிமன்றத்தில் மனுசெய்து எனது மொபைலை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவம் நடந்த உடனே அருகிலிருந்த போலிஸ் பூத்திற்கு தகவல் சொல்லாததால் வழக்கு சம்பவம் பொய் என்றாலும் புள்ளி விவரத்திற்காக போலிசார் பதிவு செய்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. நான் தற்போது வரை நீதிமன்றத்தில் மனுசெய்து எனது மொபைலை பெற்றுக்க கொள்ளாததாலும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததாலும் என்னுடைய மொபைல் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No.** **CC** No. 189/2023
**Prosecution witness.** PW 2

Name : மைக்கேல் ராஜ்

Father's Name: அந்தோணி சாமி

Village : Religion:

Taluk : Age :

( A1,A2 present.)
Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 16.11.2023

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது 63/496, பெரியார் நகர், லெட்சுமிபுரம், பொத்தூர் மெயின்ரோடு, செங்குன்றம் என்ற முகவரியில் வசித்து பழைய இரும்பு பொருட்கள் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 28.01.2023 அன்றுமதியம் 12.00 மணிக்கு நானும் எனது நண்பர் அப்புவும் செங்குன்றம் ஆலமரம் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும்போது அங்கு போலிசார் கூட்டமாக இருந்தனர். அங்கு நாங்கள் இருவரும் சென்று பார்த்தபோது அங்கே இரண்டு நபர்களை பிடித்து போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள்.

2. அந்த 2 நபர்கள் ஏதோ போனை எடுத்து வந்துவிட்டதாக போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். (**ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அதன்பின்னர் மறுநாள் போலிசார் அவர்களை பிடித்துவிட்டதாக கூறினார்கள். மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து மற்றொரு கையொப்பம் கேட்டார்கள். அதன்பேரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான்.(**கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் கடந்த 10 வருடங்களாக இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். போலிசார் நான் கூலி வேலை செய்வதாக சொல்லியிருந்தால் தவறு. அந்த இடத்தில போலிசார் நான்கைந்து பேரும் மக்கள் சுமார் 10 பேர் இருந்தார்கள். நாங்கள் அந்த இடத்தில் கும்பலாக இருந்ததை பார்த்து அங்கு சென்றோம். போலிசார் ஏற்கனவே என்னை தெரியும் என்பதால் கையொப்பம் கேட்டார்கள். மற்றபடி

வழக்கு சம்பந்தமாக நேரிடையாக எதுவும் தெரியாது. நான் என்ன வழக்கிற்காக கையொப்பம் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும், எந்த வழக்கிற்காக கையொப்பம் செய்தேன் என்று சொல்லாததால், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.